# செயலாற்றுகை அறிக்கை 2017

## சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

(2017.01.01-2017.12.31)

சட்ட ஆணைக்குழுத் திணைக்களம்

இல. 80, 4வது மாடி, அதிகரண மாவத்தை, கொழும்பு 12

www.lawcom.gov.lk

## 01. அறிமுகம்

1969 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கச் சட்ட ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் இலங்கை சட்ட ஆணைக்குழு தாபிக்கப்பட்டதுடன், இலங்கையின் சட்ட ஆணைக்குழு சட்ட மறுசீரமைப்புக்களை விதப்புரை செய்யும் அரசாங்கத்தின் பிரதான நிறுவனமாகும்.நிருவாகத்திற்காகவும், ஆராய்ச்சிகளுக்காக ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

## 02. நோக்கு

நல்லாட்சிக்காக சட்டத்தின் மறுசீரமைப்புக்களை மேம்படுத்தல்.

## 03. செயற்பணிகள்

சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட ஆணைக்குழுச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள பணிகளை செயற்படுத்தல்.

## 04. நோக்கங்கள் மற்றும் பணிகள்

சட்ட ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாவது, சட்ட மறுசீரமைப்புக்களை மேம்படுத்துவதே ஆகும். அத்தகைய மேம்பாடுகளை நோக்கமாகக் கொண்டு சட்ட ஆணைக்குழுவின் மூலம் பின்வரும் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

- i. சட்டத்தைக் கோவைப்படுத்தல்
- ii. சட்டத்தின் முரண்பாடுகளை ஒழித்தல்
- iii. சட்டத்தை முறையாக அபிவிருத்தி செய்து மறுசீரமைப்பதற்காக பொருள் அளவிலானதும் நடவடிக்கைமுறை சார்ந்ததுமான சட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் நடாத்திச் செல்லல்.
- iv. வழக்கொழிந்த மற்றும் அனாவசியமான சட்டங்களை அகற்றல்
- v. சட்டத்தை எளிதாக்குதலும் நவீனமயப்படுத்தலும்
- vi. சட்டமறுசீரமைப்புக்கான முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டு அவற்றை பரிசீலித்தல்.
- vii. மறுசீரமைப்பதற்காக காலத்துக்குக்காலம் சட்டத்தின் வெவ்வேறு பிரிவுகளை ஆராய்வு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அமைச்சுக்குச் சமர்ப்பித்தல்.
- viii. ஏனைய நாடுகளின் சட்டமுறைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
- ix. துணைச் சட்டவாக்கங்கள் நன்கு ஏற்றுக் கொண்ட கோட்பாடுகளுக்கும் சட்டவாட்சிக்கும் இயைபானதென்பதைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் பாராளுமன்றம் அல்லாத வேறுசபைகளால் துணைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அமுல்படுத்துவதை நிரந்தரமாக மீளாய்வு செய்தல்.
- x. வழக்காடுதல் சம்பந்தப்பட்ட நிருவாகத் தன்மையின் நடவடிக்கைமுறை உட்பட சட்ட நடவடிக்கை முறைகளை பகுத்தறிவு செய்தல் மற்றும் எளிதாக்குவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை முறையாக தயார் செய்தல்.
- xi. சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் சட்டத்தைக் கோவைப்படுத்துவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயார் செய்தல்.

**சட்ட ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக பின்வருபவர்கள் நியமிக்கப்பட்டனர்.**

1. சனாதிபதி சட்டத்தரணி திரு. ரொமேஷ் த சில்வா (தலைவர்)
2. பேராசிரியர் திரு. லக்ஷ்மன் மாரசிங்க
3. சனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித பெர்னாந்து
4. திரு. ஜே.எம். சுவாமிநாதன்
5. திரு. என். செல்வகுமாரன்
6. சனாதிபதி சட்டத்தரணி திரு.எம். இக்ரம் மொகமட்
7. சனாதிபதி சட்டத்தரணி திரு. எஸ். அனில் சில்வா
8. சனாதிபதி சட்டத்தரணி கலாநிதி. திரு. ஹர்ஷ கப்ரால்
9. சனாதிபதி சட்டத்தரணி திரு. மனோஹார த சில்வா
10. சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சீவ பீ. ஜயவர்தன
11. திருமதி. தாரணி எஸ். விஜேதிலக
12. பேராசிரியர் திருமதி. காமினா குணரத்ன
13. திரு. ஜீ.ஜீ. அருள்பிரகாசம்
14. திரு. திசத் விஜேகுணவர்தன
15. திரு.நவீன் சுரத் மாரபன

**பதவி நிலையில் நியமனம் பெற்ற உறுப்பினர்கள்**

I. திருமதி. தீபானி குமாரஜீவ, சட்ட வரைநர்/ சட்டவரைநர் திணைக்களம்

II. திருமதி. பியுமந்தி பீரிஸ், மேலதிகச் செயலாளர் (சட்டம்) நீதி அமைச்சு.

III. சனாதிபதி சட்டத்தரணி திரு. சஞ்சய இராஜரத்தினம், மேலதிக சொலிஸிட்டர் ஜனரால்/ சட்டமா அதிபரி திணைக்களம்.

**திணைக்களப் பதவியிநர்.**

- திருமதி. செவ்வந்தி அபேசேகர, செயலாளர் (பதில்)/ சட்ட ஆணைக்குழு.
- திருமதி. லிலந்தி பதினாகொட, உதவிச் செயலாளர்/ சட்ட ஆணைக்குழு.
- திருமதி. ஏ.ஜீ.பீ.வை. சத்துரங்கிகா, உதவிச் செயலாளர்/ சட்ட ஆணைக்குழு.
- திருமதி. எம்.வை.சீ.த. வில்வா, உதவிச் செயலாளர்/ சட்ட ஆணைக்குழு.

**5. சட்ட ஆணைக்குழுவின் செயலாற்றுகை முன்னேற்றம்**

**2017.12.31 திகதி வரை பரிந்துரைகளின் முன்னேற்றம்**

**1) முதியோர்கள் சம்பந்தப்பட்ட சட்டத்துக்கான திருத்தம்**

| | |
|---|---|
| விதப்புரை | முதியோர்கள் சம்பந்தப்பட்ட சட்டத்துக்கான திருத்தம் |
| பின்னணி | முதியோர்களுக்காக தற்போதுள்ள சட்டமுறையான பாதுகாப்பை வலுப்படுத்தல் |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனை நடைபெறுகிறது. |

**2) கைதுசெய்யும் சட்டத்துக்கான திருத்தம்**

| | |
|---|---|
| விதப்புரை | கைதுசெய்யும் சட்டத்துக்கான திருத்தம் |
| பின்னணி | பொலிஸ் அலுவலர்களுக்குரிய கைதுசெய்யும் நியதிச்சட்ட அதிகாரம் சம்பந்தப்பட்ட நடைமுறைக் கோவையை மீள்நோக்குதல். |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனை நடைபெறுகிறது. |

**3) ஜினீவா சமவாயத்தின் அரசாங்கத் திறத்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் கடப்பாடுகளைக் கவனத்திற் கொண்டு 2006 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜினீவா சமவாயச் சட்டத்தை மீளாய்வு செய்தல்.**

| | |
|---|---|
| விதப்புரை | மீளாய்வு செய்தல் |
| பின்னணி | ஜினீவா சமவாயத்தின் அரசாங்கத் திறத்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் கடப்பாடுகளைக் கவனத்திற் கொண்டு 2006 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜினீவா சமவாயச் சட்டத்தை மீளாய்வு செய்தல். |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனை நடைபெறுகிறது. |

**4) பராயமடையாதவர்கள் இறந்துவிடுவதன் மீது நட்டஈடு சேதம் அறவிடுதல்**

| | |
|---|---|
| விதப்புரை | பராயமடையாதவர்கள் இறந்து விடுவதன் மீது நட்டஈடு அறவிடுதல். 2017.05.08 ஆம் திகதி நீதி அமைச்சினால் சட்ட ஆணைக்குழுவின் அவதானிப்புக்காக இத்திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டது. |
| பின்னணி | கவனயீனம் அல்லது திடீர் விபத்தொன்றின் காரணமாக பராயமடையாத பிள்ளை ஒருவரின் மரணம் ஏற்பட்ட போது, அதன் பிரதிபலனாக அப்பிள்ளையின் பெற்றோருக்கு ஏற்படுகின்ற உள மற்றும் மன வேதனைக்காக வழக்கொன்றை தொடுப்பதனால் நட்டஈடு சேதம் அறவீடு செய்து கொள்வதற்கு அப்பெற்றோர்களுக்கு முடியாமை உரோமடச்சு சட்டத்தின் நிலைப்பாடாகியுள்ளது.<br>மேற்கூறிய நிலைப்பாடு தற்காலத்தில் நீதியின் கோட்பாடுகளுக்கு இசைவாக இல்லை. மூன்றாம் திறத்தவரின் கவனயீனம் காரணமாக பராயமடையாத பிள்ளை ஒருவரின் மரணம் நடைபெற்றபோது, அதன் பிரதிபலனாக பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற உள மற்றும் மன வேதனைக்காக நட்டஈடு சேதம் அறவீடு செய்து கொள்வதற்கு அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு முடிந்ததாக இருக்க வேண்டும்.<br>எவரேனும் மூன்றாம் திறத்தவரின் கவனயீனம் பராயமடையாத பிள்ளை ஒருவரின் மரணத்திற்கு காரணமாகும் போது, அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு ஏற்படுகின்ற மனவேதனைக்காகவும், அப்பிள்ளையின் எதிர்கால உழைப்பு இழப்புக்காகவும் நட்டஈடு சேதம் அறவீடு செய்து கொள்வதற்கு அப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு முடிந்ததாக இருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்காக சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான திருத்தம். |
| தற்போதைய நிலைமை | சட்ட ஆணைக்குழுவினால் சட்டவரைஞரிடம் சட்டமூலத்தை தயார் செய்வதற்காக மேற்கூறிய விதப்புரை சமர்ப்பிக்கப்பட்டது. |

**5) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்துக்கான திருத்தங்கள்**

| | |
|---|---|
| விதப்புரை | 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்துக்கான திருத்தங்கள்.<br>2017.06.22 ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தால் சட்ட ஆணைக்குழுவிடம் இத் திருத்தம் ஆராய்ந்துப் பார்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டது. |
| பின்னணி | நிருவாகிகள் மற்றும் ஒடுக்குதல் சம்பந்தமாக தற்போதுள்ள ஏற்பாடுகள் இக் கருமத்திற்காக போதுமானதல்ல என இனங்காணப்பட்டுள்ளது. விசேடமாக, கம்பெனியொன்று |

| | |
|---|---|
| | தொடர்பாக ஆகும் போது, கலைத்தல் ஒருமுறை நடாத்தும் போது அவற்றின் இயற்கை முடிவாகிய கம்பெனி கலைத்தல் வரை அச் செயல்கள் ஆகுவதனால், மீண்டும் உருவாக்குவதற்கான வாய்ப்பு இல்லை.<br>நிருவாகிகள் சம்பந்தமாக சட்டத்தில் தற்போது உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் கம்பெனியாலே செய்யப்படுகின்ற கோரிக்கைக்கு மட்டுப்படுகிறது. |
| தற்போதைய நிலைமை | வரைவு முடித்துக்கொண்டு பிரதமர் அலவலகத்திற்கு அனுப்பப்பட்டது. |

## 6) மணநீக்கம், கட்டுக்காப்பு மற்றும் பிரிமனைப்பணம் சம்பந்தப்பட்ட சட்டம்

| | |
|---|---|
| விதப்புரை | பணநீக்கம், கட்டுக்காப்பு மற்றும் பிரிமனைப் பணம் சம்பந்தமாக தற்போதுள்ள சட்டத்துக்கான திருத்தம் |
| பின்னணி | மீளச் சீர்செய்து கொள்ள முடியாத விவாக முறிவுகள் சம்பந்தப்பட்ட மணநீக்கம், பிரிமனைப் பணம் மற்றும் கட்டுக்காப்பு பற்றிய தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் அவ்விடயங்களை இலகுவாக புரிந்து கொள்ள கூடியவாறு முறைப்படி தயார்செய்து அச் சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் அனைத்தும் ஒன்று சேர்த்து ஒரே கட்டளைச் சட்டமாகக் கோவைப்படுத்தல்.<br>• பொது இணக்கமொன்று உள்ளபோது<br>• ஒரு திறத்தவருக்கு மணநீக்கம் அவசியமாகாதபடியால் பரஸ்பர இணக்கமொன்று இல்லாத போது<br>கட்டுக்காப்பு : பிள்ளையின் நன்மைக்காக<br>பிரிமனைப்பணம் : நியாயமான மற்றும் நீதியான நியாயாதிக்கம்<br>பராமரிப்பு : நியாயாதிக்கத்தை நீதவான் நீதிமன்றத்திற்கல்ல மாவட்ட நீதிமன்றத்திற்கு உரித்தாக்க வேண்டுமென்பதுடன், அதற்குக் குறைநிரப்பாக சேர்க்கப்பட்ட அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் தண்டிப்பதற்கான அதிகாரத்தை மாவட்ட நீதிமன்றத்திற்கு உரித்தாக்க வேண்டும். |
| தற்போதைய நிலைமை | இவ்விடயம் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு சட்டவாக்கத்தை வரைவதற்காக அப் விதப்புரைகள் சட்ட வரைஞராகிய திருமதி. தீபானி குமாரஜீவ அவர்களுக்கு கையளிக்கப்பட்டன. |

**7) சான்றுப் பொருட்களை அப்புறப்படுத்தல் சம்பந்தப்பட்ட சட்டம்**

| விதப்புரை | சான்றுப்பொருட்களைஅப்புறப்படுத்தல்சம்பந்தப்பட்டசட்டம். |
|---|---|
| பின்னணி | நீதிமன்றத்தின் வழக்கு விசாரணைக்காக சான்றாக காட்சிப்படுத்த வேண்டியதனால் ஆயுதங்கள், ஆடைகள் மற்றும் சட்டவிரோத மதுபாணப் போத்தல்கள் மற்றும் போதைவஸ்து போன்ற முக்கியமான சான்றுப்பொருட்கள் நீதிமன்றச் சான்றுப்பொருள் காப்பாளரின் பொறுப்பில் வைக்கப்படுகின்றன. வழக்கு விசாரணையின் இறுதியில் வழங்கப்படுகின்ற நீதிமன்றக் கட்டளையொன்றின் மீது மாத்திரமே அவற்றை அப்புறப்படுத்த முடியும். |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் முன்னாள் சட்டமா அதிபராக செயலாற்றிய சனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித பெர்னாந்து அவர்களால் இது தொடர்பாக வரைவொன்று சமர்ப்பிக்கப்பட்டது. |

**8) நீதிமன்றத்தை அவமதித்தல் பற்றிய சட்டம்.**

| விதப்புரை | நீதிமன்றத்தை அவமதித்தல் பற்றிய சட்டம் |
|---|---|
| பின்னணி | முன்மொழியப்பட்ட சட்டத்தின் பிரதான கருமமாவது, அவமதித்தல் பற்றிய சட்டத்தை கோவைப்படுத்தலும் மற்றும் அதன் விடயப் பொருளை விளக்குவதுமாகும். |
| தற்போதைய நிலைமை | கலந்தாலோசனை நடைபெறுகிறது. திரு. திசத் விஜயகுணவர்தன அவர்களால் தயார் செய்யப்பட்ட நீதிமன்றத்தை அவமதித்தல் பற்றிய வரைவு சபையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பான அவதானிப்புகளை பெற்றுத்தருமாறு தலைவரால் கலாநிதி. ஜே.எம். சுவாமிநாதன் அவர்களிடம் கோரிக்கை என்று செய்யப்பட்டது.<br>அ) அவமதித்தல் என்பதிலிருந்து கருதப்படுவது என்ன?<br>ஆ) அது தண்டனை பெறவேண்டியது எப்போது?<br>இ) நீதிமன்ற நடவடிக்கை முறை<br>ஈ) நீதிமன்றத்தின் இடைக் கட்டளைக்கு கீழ்ப்படியாதவிடத்து ஏற்படுகின்ற நிலைமை.<br>உ)இறுதியான நீதிமன்றக் கட்டளைக்கு கீழ்ப்படியாதவிடத்து ஏற்படுகின்ற நிலைமை. |

## 6. 2017.01.01 முதல் 2017.12.31 வரை நிதி முன்னேற்றம்

| விபரம் | 2017 ஆண்டுக்கான மொத்த தேறிய ஏற்பாடுகள் (ரூபா) | 2017.12.31 ஆம் செலவினம் (ரூபா) | 2017.12.31 ஆம் நிதி முன்னேற்றம் நூற்று வீதத்தில் % |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 15,335,000.00 | 14,782,622.56 | 96% |
| மூலதனச் செலவினம் | 1,950,000.00 | 1,727,612.47 | 89% |
| மொத்தம் | **17,285,000.00** | **16,510,235.03** | **96%** |

7. <u>நிதிசார் செயலாற்றுகை (மீண்டுவரும் செலவினம்)</u> **2017/01/01-2017/12/31** வரை

| செலவின விடயம் | செலவின விபரம் | 2017க்காக மொத்த வரவு செலவு மதிப்பீடு (ரூபா) | நி. ஓ. 66 இன் பிரகாரம் மாற்றல்கள் | 2017 மொத்தத் தேறிய ஒதுக்கீடு | 01/01/2017-31/12/2017 வரையிலான மொத்த செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | | | |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 5,000,000.00 | - | 5,000,000.00 | 4,955,154.58 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறை நாட் சம்பளம் | 200,000.00 | - | 200,000.00 | 160,055.95 |
| 1003 | பிற படிகள் | 5,000,000.00 | (400,000.00) | 4,600,000.00 | 4,296,439.13 |
| | <u>பிரயாணச் செலவுகள்</u> | | | | |
| 1101 | உள்நாட்டு | 50,000.00 | (37,000.00) | 13,000.00 | 12,765.00 |
| 1102 | வெளிநாட்டு | 1,025,000.00 | 360,000.00 | 1,385,000.00 | 1,366,490.07 |
| | **வழங்கல்கள்** | | | | |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள் | 350,000.00 | 19,000.00 | 369,000.00 | 365,715.25 |
| 1202 | எரிபொருள் | 350,000.00 | 42,000.00 | 392,000.00 | 369,994.12 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 200,000.00 | (60,000.00) | 140,000.00 | 139,586.50 |
| | **பேணல் செலவுகள்** | | | | |
| 1301 | வாகனங்கள் | 550,000.00 | (52,000.00) | 498,000.00 | 497,702.00 |
| 1302 | இயந்திரங்களும் இயந்திரப்பொறிகளும் | 350,000.0 | (222,000.00) | 128,000.00 | 121,160.71 |
| 1303 | கட்டடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | 100,000.00 | 80,000.00 | 180,000.00 | 179,200.50 |
| | **சேவைகள்** | | | | |
| 1402 | தபால் மற்றும் தொலைத் தொடர்பு | 500,000.00 | (110,000.00) | 390,000.00 | 368,766.74 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 1,100,000.00 | 400,000.00 | 1,500,000.00 | 1,424,959.85 |
| 1409 | பிற | 400,000.00 | 10,000.00 | 410,000.00 | 398,344.07 |
| | மாற்றங்கள் | | | | |
| 1502 | ஓய்வு நன்மைகள் | 30,000.00 | (30,000.00) | - | - |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி | 130,000.00 | - | 130,000.00 | 126,288.09 |
| | மொத்தம் | **15,335,000.00** | **-** | **15,335,000.00** | **14,782,622.56** |

8. நிதிசார் செயலாற்றுகை (மூலதனச் செலவினம்) **2017/01/01-2017/12/31** வரை

| செலவு விடயம் | செலவு விபரம் | 2017க்கான மொத்த வரவு செலவு மதிப்பீடு ரூபா | நி. ஓ. 66 இன் பிரகாரம் மாற்றல்கள் | 2017 மொத்தத் தேறிய ஒதுக்கீடு | 01/**01/2017-31/12/2017** வரையிலான மொத்த செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | மூலதனச் சொத்துக்கள் புனர்வாழ்வு மற்றும் மேம்படுத்தல் | | | | |
| 2002 | இயந்திரங்களும் இயந்திரப்பொறிகளும் | 100,000.00 | - | 100,000.00 | - |
| 2003 | வாகனங்கள் | 250,000.00 | - | 250,000.00 | 156,029.58 |
| | மூலதனச் சொத்துக்களைக் கொள்ளல் | | | | |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 350,000.00 | - | 350,000.00 | 346,982.26 |
| | திறன் விருத்தி | | | | |
| 2401 | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 1,250,000.00 | - | 1,250,000.00 | 1,224,600.63 |
| | மொத்தம் | **1,950,000.00** | **-** | **1,950,000.00** | **1,727,612.47** |

9. அரசாங்க அலுவலர்களின் முற்பண "பி" கணக்கு - 2017 திசெம்பர் 31 திகதிக்கு

| | செலவினத்தில் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்றுமீதிகளின் உச்ச எல்லை |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தால் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லைகள்: | 1,200,000.00 | 500,000.00 | 2,500,000.00 |
| ஆண்டினுள் மீள்நோக்கு எல்லைகள் | - | - | - |
| ஆண்டு இறுதியில் உள்ளபடியான பெறுமதிகள்: | 1,151,514.00 | 876,050.32 | 2,478,258.62 |

முற்பணக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு - 2017

| | திணைக்களப் புத்தகங்களின்படி | திறைசேரி கணினி அறிக்கைகளின்படி |
|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொணரப்பட்ட மீதி (2017.01.01 திகதிக்கு) | 2,202,794.94 | 2,202,794.94 |
| கூட்டுக: ஆண்டினுள் மொத்த பற்று வைத்ததல்கள் | 1,151,514.00 | 1,209,379.00 |
| கழிக்குக: ஆண்டினுள் மொத்த வரவு வைத்தல்கள் | 876,050.32 | 933,915.32 |
| ஆண்டு இறுதியின் மீதி (2017.12.31 திகதிக்கு) | **2,478,258.62** | **2,478,258.62** |

**2017.12. 31 ஆம் திகதிக்கு பணியாட்டொகுதியின் அமை**

| பதவி | தரம் | சம்பளப் படிநிலை | சேவை மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை (நிரந்தர) | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றி - டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| செயலாளர் | I | SL 1/2006 | 1 | 1 | - | 1 |
| பிரதி செயலாளர் | II | SL 1/2006 | 1 | 1 | - | 1 |
| உதவிச் செயலாளர் | III | SL 1/2006 | 1 | 4 | 4 | - |
| மொழிபெயர்ப்பாளர் | I | MN 6/2006 | 1 | 1 | 1 | - |
| கணக்கு உதவியாளர் | III | MN 4/2006 | 3 | 1 | - | 1 |
| அபிவிருத்தி அலுவலர் | III | MN 4/2006 | 3 | 4 | 2 | 2 |
| நூலகர் | III | MN 3/2006 | 3 | 1 | 1 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | III | MN 2/2006 | 3 | 8 | 3 | 5 |
| சுருக்கெழுத்தாளர் | III | - | 3 | 1 | - | 1 |
| சாரதி | III,II | PL 1/2006 | 4 | 4 | 4 | - |
| கா.கா.ச | III,II | PL 1/2006 | 4 | 3 | 3 | - |
| | மொத்தம் | | | 29 | 18 | 11 |